1491

# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2014
## சைவநெறி

| தரம்:- 10 | சுட்டெண்:- | நேரம்:- 3 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி I

❖ மிகவும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. ஓங்கார வடிவினராய் விளங்குபவர்
   1. வைரவர் 2. விநாயகர் 3. வீரபத்திரர் 4. விஷ்ணு
2. மறைத்தல் தொழிலைச் செய்யும் மூர்த்தி
   1. பிரமா 2. விஷ்ணு 3. உருத்திரன் 4. மகேஸ்வரன்
3. சிவபெருமானின் இடப்பாகம் பெற உமாதேவியார் அனுட்டித்த விதரம்
   1. சிவராத்திரி 2. கேதாரகௌரி 3. பங்குனி உத்தரம் 4. ஆடிப்பூரம்
4. விசாரசருமர் எனும் இயற்பெயர் கொண்டவர்
   1. சாக்கிய நாயனார் 2. கண்ணப்பநாயனார்
   3. சண்டேஸ்வர நாயனார் 4. திருநாவுக்கரசுநாயனார்
5. சிவதொண்டன் மாத இதழின் ஆசிரியர்
   1. யோகர் சுவாமி 2. கடையிற்சுவாமி 3. செல்லப்பாசுவாமி 4. முத்துலிங்க சுவாமி
6. சேர் பொன் இராமநாதனால் உருவாக்கப்பட்ட ஆயலம்
   1. நகுலேச்சரம் 2. முன்னேச்சரம்
   3. கதிர்காமம் 4. பொன்னபலவாணேச்சரம்
7. அருணகிரிநாதர் முதல் பாடிய திருப்புகழ்
   1. "கைத்தல நிறைகனி ...." 2. "முத்தைத்தரு ...."
   3. "இறவாமல் பிறவாமல்..." 4. "பாதிமதி நதி...."
8. திருத்தொண்டர் தொகை பாடிய சமயகுரவர்
   1. திருஞானசம்பந்தர் 2. திருநாவுக்கரசர்
   3. சுந்தரமூர்த்தி நாயனார் 4. மாணிக்கவாசகர்
9. மறைஞான சம்பந்தரின் குருபூசை தினம்
   1. ஐப்பசி சுவாதி 2. புரட்டாதி பூரம்
   3. சித்திரைச்சதயம் 4. ஆவணி உத்தரம்
10. நீர் வீட்டில் திருமுறைப்பாடல்கள் பாடி வழிபடவேண்டியது
    1. நாள்தோறும் 2. வெள்ளிக்கிழமைகளில்
    3. விரதகாலத்தில் 4. பண்டிகை காலங்களில்
11. சூடு மிதித்தலுடன் தொடர்புடைய சடங்கு
    1. முளைப்புச் சடங்கு 2. ஏர்மங்கலம் 3. பொலிசடங்கு 4. ஆயுதபூசை
12. பெரிய புராணத்தின் காப்புச் செய்யுள்
    1. திகடசக்கரம் ..... 2. "உலகெலாம் ..."
    3. "ஐந்துகரத்தனை .... 4. "ஆயகலைகள் ..."
13. நாச்சியார் திருமொழி பாடியவர்
    1. நம்மாழ்வார் 2. மதுரகவியாழ்வார்
    3. ஆண்டாள் 4. பெரியாழ்வார்
14. நாளும் கோளும் நல்லதாக அமைய நீர் ஓதவேண்டிய பதிகம்
    1. "இடரினும் தளரினும்..." 2. வேயுறுதோளி பங்கன் ..."
    3. "கோலமால் வரை ... 4. சிறையாரு மடக்கிளியே ....
15. "மூவரென இருவரென ..." தேவாரத்தின் பண்
    1. நட்டராகம் 2. தக்கேசி 3. குறிஞ்சி 4. நட்டபாடை

16. சிதம்பரத்தில் தேர் ஓடாது தடைப்பட்ட போது பாடப்பட்டது
1. திருப்புராணம் 2. கொடிக்கவி 3. திருவிசைப்பா 4. திருப்பல்லாண்டு

17. இறைவன் யமனை உதைத்த புராணக் கதையைக் கூறும் தேவாரம்
1. ஆலந்தானுகந்து ....." 2. எடுத்தவன் தருக்கை ...."
3. சங்கநிதிபதுமநிதி ..." 4. நீறணிபவளக்குன்றமே ...."

18. சூரியன் உதித்து ஏழரை நாளிகைக்குள் நடைபெறும் பூசை
1. உஷக்காலப்பூசை 2. காலைச்சந்திப்பூசை
3. சாயங்காலப்பூசை 4. இரண்டாம்காலப்பூசை

19. திருக்கடவூர் இறைவன்
1. வன்மீகநாதர் 2. அமிர்தகடேஸ்வரர்
3. தியாகேசர் 4. சோமசுந்தரர்

20. இரண்டு வாரங்களுக் கொருமுறை நடைபெறும் கிரியை
1. சோமவாரம் 2. சுக்கிரவாரம் 3. திருவாதிரை 4. பிரதோஷம்

21. அறிவின் தேவதையாகிய பிரகஸ்பதியை குறித்து அனுட்டிக்கப்படும் விரதம்
1. தைப்பூசம் 2. மாசிமகம்
3. பங்குனிஉத்தரம் 4. வைகாசிவிசாகம்

22. மேடசங்கிராந்தி எனப்படுவது
1. தீபாவளி 2. வருடப்பிறப்பு 3. ஆடிப்பிறப்பு 4. தைப்பொங்கல்

23. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன
1. புருடார்த்தங்கள் 2. நாற்பாதங்கள் 3. மார்க்கங்கள் 4. அந்தகரணங்கள்

24. பாவை நோன்பு அனுட்டிக்கும் காலம்
1. தை 2. ஆடி 3. மார்கழி 4. கார்த்திகை

25. ஓசை கொடுத்த நாயகி வீற்றிருக்கும் தலம்
1. திருவாடுதுறை 2. திருக்கோலக்கா
3. திருவண்ணாமலை 4. திருவதிகை

26. அருணந்திசிவாச்சாரியாரின் சிறப்புப் பெயர்
1. திருவெண்காடர் 2. பரஞ்சோதி 3. சதாசிவம் 4. சகலாகம பண்டிதர்

27. சார்ந்ததன் வண்ணமாதலால் ஆன்மாவிற்கு வழங்கப்பட்ட பெயர்
1. சதசத்து 2. அசித்து 3. சித்து 4. ஜீவான்மா

28. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன இடம் பெறும் திருமுறை
1. எட்டு 2. பத்து 3. ஒன்பது 4. பன்னிரண்டு

29. சிவபெருமான் நரிகளைப் பரிகளாக்கிய நாள்
1. ஆவணிமூலம் 2. ஆனிமகம் 3. ஆடிப்பூரம் 4. வைகாசிமூலம்

30. அபிராமிப்பட்டர் கண்ட அம்மையின் அருட்காட்சியை வெளிப்படுத்திய பாடலின் முதல் அடி
1. "பூத்தவளே ...." 2. ஆத்தாளை எங்கள்..."
3. விழிக்கே அருளுண்டு ...." 4. உதிக்கின்ற செங்கதிர் ...."

31. திருஞானசம்பந்தப் பெருமான் "மட்டிட்டபுன்னை ......" எனும் பதிகம் பாடி நிகழ்த்திய அற்புதம்
1. பூம்பாவையை உயிர்ப்பித்தல் 2. உலாவாக்கிழி பெறுதல்
3. குளிர்ச்சுரம்நீக்குதல் 4. படிக்காசு பெறுதல்

32. பன்னிரு வேளை பூசை நடைபெறும் ஆலயம்
1. திருவாரூர் 2. திருவேரகம் 3. திருச்செந்தூர் 4. திருப்புன்கூர்

33. பழைய வரலாற்றைக் கூறும் நூல்
1. திருக்குறள் 2. இதிகாசம் 3. புராணம் 4. திருமந்திரம்

34. திருநாவுக்கரசநாயனார் சிவபெருமானிடம் கொண்ட உறவு
1. தந்தை – மகன் 2. குரு – சீடன்
3. ஆண்டாள் - அடிமை 4. தோழன்

35. பிரித்தானிய அரசின் "நைற்" பட்டத்தை பெற்றவர்
1. சேர் பொன் இராமநாதன் 2. சு. இராசரத்தினம்
3. ஆறுமுகநாலவலர் 4. சிவபாதசுந்தரனார்

36. "காதிலிணி கண்டிகை ...." இதில் கண்டிகை எனக்குறிப்பிடப்படுவது

1. திருநீறு
2. திருவைந்தெழுத்து
3. உருத்திராக்கம்
4. பூமாலை

37. "பட்டகட்டையில் பகற்குருடு போகிறது" எனக்கூறியவர்

1. மறைஞானசம்பந்தர்
2. அருணந்திசிவாச்சாரியார்
3. மெய்கண்ட தேவர்
4. உமாபதி சிவாச்சாரியார்

38. சித்தாந்த அட்டகத்துள் அடங்கும் நூல்

1. கோயிற்புராணம்
2. சங்கற்பநிராகரணம்
3. திருமுறைகண்ட புராணம்
4. உண்மைவிளக்கம்

39. பஞ்சமாபதங்களில் கொலையை தவிர்க்க செய்ய வேண்டியது

1. பகிர்ந்துண்ணல்
2. சைவஉணவு உண்ணல்
3. இறைநாமம் சொல்லல்
4. உண்மை பேசுதல்

40. பதி, பசு, பாசம் என்பவற்றைக் குறிப்பிடுவது

1. முக்குணம்
2. முப்பொருள்
3. முக்கரணம்
4. முத்திருமேனி

(40 ×1 = 40 புள்ளிகள்)

## பகுதி II

✶ முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

**1) பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையின்றி எழுதி பாடியவர், தலம், பொருள் என்பவற்றை எழுதுக.**

1. "திருவேயென் செல்வமே ...."
2. "நீறணிபவளக் குன்றமே நின்ற ..."
3. "மாறிநின் றென்னை ...."
4. ஆதியாய் நடுவுமாகி ...."

(4 + 3+ ½ + ½ ) 2 16 புள்ளிகள்

**2) "கிரியை என்பது நியதிச் செயலாகும்"**

1. நித்தியகிரியை, நைமித்தியகிரியை என்பதன் விளக்கம் யாது?
2. ஆறுகாலப் பூசைகளும் எவை?
3. நித்திய கிரியையின் அங்கங்கள் எவை?
4. மகோற்சவக் கிரியையினால் பெறக்கூடிய நன்மைகள் எவை?

(2 + 3+ 3+ 3 = 11புள்ளிகள்)

**3) ஆவதிது கேண்மின்மறை யோரெனடி யானிந்**
**நாவனக ரூரனிது நான் மொழிவ தென்றான்**
**தேவரையு மாலயன் முதற்றிருவின் மிக்கோர்**
**யாவரையும் வேறடிமை யாவுடைய வெம்மான்**

1. வேதியர் நாவலூர் நம்பியை அடிமை எனக் கூறியதற்குரிய காரணங்களை எழுதுக.
2. இப்பாடலில் வேறு யாவர் சிவபெருமானின் அடிமைகளாக உள்ளனர்.
3. வேதியர் கூறிய வழக்கை நாவலூர் நம்பி ஏற்றுக் கொண்டாரா? அவர் அதற்கு கூறிய பதில் யாது?
4. சபையிலுள்ளோரை வேதியர் மறையோர் என விழித்தான் காரணம் யாது?

( 3+3+3+2=11 புள்ளிகள்)

**4) "சித்தர்கள் சித்தத்தை சிவன்பால் வைத்தவர்கள்"**

1. சித்தர்களின் இயல்புகளை குறிப்பிடுக.
2. சித்தர்களை ஈழத்துச் சித்தர்கள் தமிழ் நாட்டுக்குச் சித்தர்கள் என வகைப்படுத்துக.
3. செல்லப்பா சுவாமிகளின் மகாவாக்கியங்கள் 4 தருக.
4. அபிராமிப்பட்டருக்கு அம்மையார் உதவிய அருட்காட்சியை குறிப்பிடுக.

( 2+3+3+3=11 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

5) "சமய குரவர் சந்தான குரவரைப் போற்றுவோம்"

1. சமய குரவர்களையும் அவர்கள் நின்ற நெறி, அடைந்த முத்தியை குறிப்பிடுக.
2. திருஞானசம்பந்தர் செய்த அற்புதங்கள் 5ஐ குறிப்பிடுக.
3. சுந்தரமூர்த்தி நாயனாரை இறைவன் தடுத்தாட்கொண்ட கதையை சுருக்கமாக தருக.
4. சித்தாந்த அட்டகத்தை அருளியவர் யார்? இரண்டு நூல்களைக் குறிப்பிடுக,

( 2+3+3+3=11 புள்ளிகள்)

6) "விரதங்கள் பண்டிகைகள் ஆன்மீக வாழ்விற்கு துணைபுரிவன"

1. விரதங்களுக்கும் பண்டிகைகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் எவை?
2. பண்டிகை என்றால் என்ன? இக்காலங்களில் இடம் பெறும் விசேட செயற்பாடுகள் எவை?
3. மகரசங்கிராந்தியில் இடம் பெறும் பண்டிகை எது? அதனை எவ்வாறு கொண்டாடுவீர்?
4. விரதகாலங்களில் நீர் செய்யும் அறச் செயல்கள் எவை?

( 3+3+3+2=11 புள்ளிகள்)

7) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. சேர் பொன் இராமநாதன்
2. மெய்கண்ட தேவர்
3. பாடசாலையில் சமயம்
4. யோகர் சுவாமிகள்
5. தீபாவளிப் பண்டிகை

(5½×2 = 11 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457